**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 394**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
பத்தாவது பாராளுமன்றம்
(முதலாவது கூட்டத்தொடர்)

# அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் எட்டாவது அறிக்கை

(2025.08.20 ஆம் திகதி இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை பற்றி மேற்கொள்ளப்பட்ட விசாரணை

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ (வைத்தியர்) நிஷாந்த சமரவீர அவர்களால் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது

*இலங்கைப் பாராளுமன்றத்தால் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிடப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டது*

**<u>அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் உறுப்பினர்கள்</u>**

**<u>பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்</u>**

1. கௌரவ (வைத்தியர்) நிஷாந்த சமரவீர, பா.உ., (தவிசாளர்)
2. கௌரவ அர்கம் இல்யாஸ், பா.உ.,( 2025.05.08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
3. கௌரவ மனோ கணேசன், பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
4. கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர, பா.உ., (2025.05.20 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
5. கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
6. கௌரவ டி.வீ. சானக, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
7. கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
8. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
9. கௌரவ எஸ்.எம். மரிக்கார், பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
10. கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ., (2025.05.20ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
11. கௌரவ சமிந்த விஜேசிறி, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
12. கௌரவ அபூபக்கர் ஆதம்பாபா, பா.உ., (2025.05.08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
13. கௌரவ எம்.கே.எம். அஸ்லம், பா.உ.,
14. கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)

15. கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ, பா.உ.,
16. கௌரவ திலித் ஜயவீர, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
17. கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், பா.உ., (2025.05.08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
18. கௌரவ சுஜீவ திசாநாயக்க, பா.உ.,
19. கௌரவ சுகத் பலகல்ல, பா.உ.,
20. கௌரவ (டாக்டர்) எஸ். ஶ்ரீ பவானந்தராஜா, பா.உ.,
21. கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுவபற்ற) பிரகீத் மதுரங்க, பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
22. கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ.,
23. கௌரவ ருவன் மாபலகம, பா.உ.,
24. கௌரவ சுனில் றாஜபக்ஷ, பா.உ.,
25. கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ, பா.உ.,
26. கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான, பா.உ.,
27. கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம், பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)
28. கௌரவ திலிண சமரகோன், பா.உ.,
29. கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி, பா.உ.,
30. கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர, பா.உ.,
31. கௌரவ தினேஷ் ஹேமந்த , பா.உ., (2025.03.21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட)

## <u>குழு அலுவலகத்தின் பணியாட்தொகுதி</u>

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தற்போதைய பணியாட்தொகுதி அலுவலர்கள்.

- ❖ உதவி பணிப்பாளர் (நிருவாகம்) - செல்வி ஹிமாலி சமரதிவாகர
- ❖ பிரதான அலுவலர் - திருமதி. எச்.ஆர்.த.சொய்சா
- ❖ பிரதிப்பிரதான அலுவலர் - திரு.எஸ்.லக்ஷான் விக்கிரம
- ❖ பாராளுமன்ற அலுவலர் - திருமதி. ஜீ.வி.எஸ்.கே.குமாரி
- ❖ பாராளுமன்ற அலுவலர் - திருமதி. ஐ.எஸ்.குமாரி
- ❖ பாராளுமன்ற அலுவலர் - திருமதி. ஜீ.எல்.டி.பெர்னாந்து

## <u>குழு அறிக்கைகள்</u>

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கைகளை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்து கீழ்க் காணும் படிமுறை ஊடாக தரவிறக்கம் செய்ய முடியும்.

www.parliament.lk

↓

தமிழ்

↓

பாராளுமன்ற அலுவல்கள்

↓

குழுக்கள்

↓

குழு அறிக்கைகள்

**உள்ளடக்கம்**


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1. | தவிசாளரின் குறிப்பு | V |
| 2. | நிறைவேற்றுச் சுருக்கம் | VII |
| 3. | நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் | 01 |
| 4. | அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிறுவனம் - இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 02-17 |

## தவிசாளரின் குறிப்பு

இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு 2025.08.20 ஆந் திகதி துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழுள்ள இலங்கை சிவில் விமானப் போக்வரத்து அதிகாரசபை சம்பந்தமாக விசாரணையை மேற்கொண்டது. அதன்போது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை அறிக்கைகள் பற்றி விரிவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை இத்தால் முன்னிலைப்படுத்துகின்றேன்.

அனைவருக்கும் பாதுகாப்பான விமானப்பயணத்தை உறுதி செய்யும் நோக்குடன் திறமையும் நம்பத்தன்மையும் கூடிய விமான சேவைகளை பாதுகாக்கும் தொலைநோக்குடனும் முலோபாய திட்டமிடல் மற்றும் பயனுறுதிமிக்க ஒழுங்குபடுத்தலுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, சர்வதேச தரநிர்ணயங்கள், பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் தேசிய சட்டவாக்கத்துறை தேவைகளுக்கு இணைவாக பாதுகாப்பான, வினைத்திறன்மிக்க, நீடித்த மற்றும் சூழல் நேயமான தேசிய சிவில் விமான சேவைகள் கட்டமைப்பினை கொண்டு நடத்தும் பணிநோக்குடன் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தமது ஒழுங்குபடுத்தல் பணியை எவ்வாறான வகையில் வினைத்திறனுடன் மேற்கொள்கின்றது என்பதை மையமாகக் கொண்டு விசாரணைகளை மேற்கொண்டோம்.

சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலைகளில் 30 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றமை, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தில் திருத்தங்களை ஒழுங்குபடுத்தும் செயற்பாட்டிற்கு ஏற்புடையதாக்குவதில் தாமதங்கள் ஏற்படுதல், ரூபா 20,630 மில்லியன் வெளிநாட்டு விற்பனைக்கான மிகைக்கட்டணம் (OSS) ஒருங்கிணைந்த நிதியத்தில் வரவு வைக்கப்படாமால் அதிகாரசபையின் வருமானமாகவே அடையாளம் காணப்பட்டு தக்கவைப்படுதல், அதிகாரசபைக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் காணிகள் சம்பந்தமாக சீரான மதிப்பீடு மேற்கொள்ளப்படாமை ஆகிய விடயங்கள் தொடர்பாக குழு கவனம் செலுத்தியது. 2026 ஆம் ஆண்டில் சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பின் கணக்காய்வுக்கு உட்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுவதால்

நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளின் வினைத்திறனில் மேற்படி காரணிகள் பாதகமான தாக்கங்களை செலுத்தக்கூடுமென்பதால் அதன் குறைபாடுகளை இயன்ற வரையில் நிறைவு செய்துகொள்வது முக்கியமானதென இவ்விசாரணையில் அவதானிக்கப்பட்டது.

இந்த விசாரணை செயன்முறையில் அனைத்து அங்கத்துவ உறுப்பினர்களும் முனைப்பான பங்களிப்பையும் விரிவான விமர்சனங்களையும் மிகவும் வியந்து பாராட்டுகின்றேன்.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக, கௌரவ சபாநாயகர் உட்பட பாராளுமன்றத்தின் பணியாட்தொகுதி மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் ஆலோசகர்கள் இருவரினதும் ஒத்துழைப்பையும், திறைசேரி அலுவலர் மற்றும் பதில்கடமையாற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி உள்ளிட்ட கணக்காய்வு அலுவலகத்திடமிருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்பையும் வியந்து பாராட்டுகின்றேன்.

வைத்தியர் நிஷாந்த சமரவீர
தவிசாளர்
அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

## நிறைவேற்றுச் சுருக்கம்

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் ஊடாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தின் படி இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்குரிய 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான முனைப்பழியுள்ள அபிப்பிராயம் கிடைத்துள்ளது.

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை அடையாளம் கண்டு, அமைச்சரவை அங்கீகாரத்துடன், குறித்த வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பணிப்பாளர் சபைக்கு சிவில் விமான சேவைகள் துறைசார்ந்த அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் இருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், பிரதம நிறைவேற்று அலுவலரான பணிப்பாளர் நாயகப் பதவி பதில் கடமையாற்றும் பதவியாக காணப்பட்டது.

தேசிய கொள்கைகளுக்கு அமைவாக 5 ஆண்டுகால மூலோபாய திட்டமொன்றை உருவாக்க வேண்டியிருந்த போதிலும், அதிகாரசபை 2025 தொடக்கம் 2027 வரை 03 ஆண்டுகளுக்கு மாத்திரம் 'rolling over' (சுழற்சி) முறையில் திட்டமொன்று உருவாக்கப்பட்டிருந்தமை கவனத்தை ஈர்த்துள்ளது.

2025 ஜுலை 30 ஆம் திகதியளவில் அங்கீகரிக்கப்பட்ட 208 பதவிகளில் 43 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. சிரேஷ்ட நிலை மற்றும் மூன்றாம் நிலை பதவிகளில் வெற்றிடங்கள் கூடுதலாக காணப்பட்டன. சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு (ICAO) பிரமாணங்களுக்கு ஏற்புடையதாகும் வகையில் ஆட்சேர்ப்பு செயல்படிமுறைகளை (SOR) திருத்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு நவம்பர் வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 20,630 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு மிகைக்கட்டணம் (OSS) ஒருங்கிணைந்த நிதியத்தில் வரவு

வைக்கப்படாமல் வருமானமாகவே அடையாளம் காணப்பட்டு தக்கவைப்பட்டிருந்தது. 2025 யூன் மாதம் 30 ஆந் திகதி அளவில் விமான சேவைகள் நிறுவனங்களிலிருந்து வரி வருமானமாக ரூபா 30,844.4 மில்லியன் மற்றும் 1,541,962 அமெரிக்க டொலர் அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

சிவில் விமான சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான தலங்கமவில் அமைந்துள்ள காணி (52 ஏக்கர்) இராணுவ தலைமையகத்திற்கு சுவீரிக்கப்பட்டதையடுத்து, அதற்கு பதிலாக கிடைத்த சீத்தாஎளிய கந்தபொல வனப்பகுதியிலுள்ள 0.9431 ஹெக்டெயார் காணித்துண்டு 2025 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை அதிகாரசபையினால் சுவீகரிக்கப்படவில்லை.

தீயினால் சேதமடைந்த வீரவில சுற்றுலா விடுதியை புனரமைப்பதற்கு மதிப்பிடப்பட்ட ரூபா 16 மில்லியனை தாண்டி மொத்தமாக ரூபா 24 மில்லியன் செலவிடப்பட்டது. விடுதியின் முகாமைத்துவ பணிகளை ஆற்றிய சேவை வழங்கும் நிறுவனத்திற்கு மாதாந்தம் ரூபா 210,000/- செலுத்தப்பட்ட போதிலும், விடுதியிலிருந்து கிடைக்கப்பெற்ற ஆண்டு வருமானம் ரூபா 200,000/- இற்கும் 400,000/- இற்கும் இடைப்பட்டதாக காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் 09 ஆம் இலக்க விடுதியை புனரமைப்பதற்காக ரூபா 10.67 மில்லியன் செலவிடப்பட்டிருப்பினும், புனரமைப்பதற்கு முன்பிருந்த பிரதான கட்டமைப்பில் காணப்பட்ட குறைபாடு திருத்திய பின்னரும் மாறாமல் இருந்தது.

விமானங்களுக்கான சேவைகள் மற்றும் காணிகள் முறையான குத்தகை ஒப்பந்தம் செய்யப்படாமல் வரையறுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (இலங்கை) கம்பனிக்கு (AASL) வழங்கப்பட்டிருந்தது. இந்த சேவைகளுக்காக AASL நிறுவனத்திடமிருந்து அறவிடுவதல் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன், கட்டணம் விதித்தல் தொடர்பான பிரேரணைகளை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் சர்வதேச விமான நிலையமாக நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் 349 ஏக்கர் காணியின் எல்லைகளை அடையாளம் காணும் செயற்பாடுகளை அதிகாரசபை நிறைவு செய்திருந்ததுடன், குறித்த காணியின் எல்லைகளை வர்த்தமானப்

பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு தேவையான கட்டளைகள் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கேப்டவுன் சமவாயத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக சமவாயச் சட்டமூலத்தை மும்மொழிகளிலும் தயாரிக்கப்படவுள்ளதுடன் சட்டமா அதிபரின் இசைவுச் சான்றிதழும் பெறப்படவுள்ளது.


| **தொடரிலக்கம்** | **தலைப்பு** | **பக்க இலக்கம்** |
|---|---|---|
| **01** | 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை ஆராய்தல் | 2 |
| **02** | பணிப்பாளர் சபை கட்டமைப்பு | 3 |
| **03** | நிறுவனத் திட்டம் | 4 |
| **04** | பணியாட் தொகுதியிலுள்ள வெற்றிடங்கள் | 5 |
| **05** | அதிகாரசபை சேகரிக்கும் வெளிநாட்டு விற்பனைக்கான மிகைக்கட்டணங்களை (OSS) ஒருங்கிணைந்த நிதியத்தில் வரவு வைக்காமை | 7 |
| **06** | அதிகாரசபைக்கு விமான சேவைகள் நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வரி வருமானம் நிலுவையாக காணப்படல் | 9 |
| **07** | அதிகாரசபைக்கு சொந்தமான தலங்கம, அக்குரேகொட காணிக்குப் பதிலாக சீத்தாஎளிய கந்தபொல வனப்பகுதியில் வழங்கப்பட்ட காணியின் உரிமையை சுவீகரிப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்காமை | 11 |
| **08** | வீரவில சுற்றுலா விடுதியை புனரமைத்தல் | 12 |
| **09** | அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் பணிமனையை திருத்தியமை | 14 |

| | | |
|---|---|---|
| **10** | முறையான குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாது வரையறுக்கப்பட்ட விமானநிலையம், விமானசேவைகள் (இலங்கை) கம்பனிக்கு காணியை வழங்கியமை | 15 |
| **11** | யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் காணிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமை | 16 |
| **12** | கேப்டிவுன் சமவாயத்தை நடைமுறைப்படுத்தாமை | 17 |

**பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்**

**அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் எட்டாவது அறிக்கை**

பத்தாவது பாராளுன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் எட்டாவது அறிக்கையை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றது.

அனைத்து பகிரங்கக் கூட்டுத்தாபனங்களும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் அத்துடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்படும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேலான பங்குகளை அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை சம்பந்தப்பட்டதாக வைத்திருக்கின்றதுமான கம்பனி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகையை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒத்துழைப்புடன் ஆராய்தல் அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் பணியாகும்.

தற்போது, 462 அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கண்காணிப்பின் கீழ் வருகின்றதும் அரசாங்கத் தொழில்முயற்சிகள் திணைக்களம் மற்றும் வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகின்றதுமான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் காணப்படுகின்றன. (மூலம் அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் – 2025.09.04 ஆம் திகதியில் உள்ளவாறு)

பத்தாவது பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் முதலாவது கூட்டத்தொடரில் (முதல் 11 மாதங்களுக்குட்பட்டது) நடத்தப்பட்ட குழுக் கூட்டங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| **தொடரிலக்கம்** | **நிறுவனம்** | **குழு நடைபெற்ற திகதி** |
|---|---|---|
| 1. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 18.02.2025 |
| 2. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 20.02.2025 |
| 3. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 27.02.2025 |
| 4. | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை | 05.03.2025 |
| 5. | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை | 12.03.2025 |
| 6. | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை | 26.03.2025 |
| 7. | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை | 27.03.2025 |
| 8. | வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (இலங்கை) கம்பனி | 02.04.2025 |
| 9. | காணி சீர்த்திருத்த ஆணைக்குழு | 08.05.2025 |
| 10. | வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (இலங்கை) கம்பனி | 09.05.2025 |
| 11. | ஸ்ரீஜயவர்தனபுர பொது மருத்துவமனை | 15.05.2025 |
| 12. | இலங்கை வெளிநாட்டு வேலைவாயப்புப் பணியகம் | 23.05.2025 |
| 13. | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 04.06.2025 |
| 14. | ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 20.06.2025 |

| | | |
|---|---|---|
| 15. | மகாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 09.07.2025 |
| 16. | காணி சீர்த்திருத்த ஆணைக்குழு | 17.07.2025 |
| 17. | அரச மரக்கூட்டுத்தாபனம் | 23.07.2025 |
| 18. | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 20.08.2025 |
| 19. | இலங்கை துறைமுக அதிகாரசபை | 10.09.2025 |
| 20. | புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம் | 12.09.2025 |
| 21. | இலங்கை மின்சார சபை | 24.09.2025 |
| 22. | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை | 08.10.2025 |
| 23. | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச | 10.10.2025 |
| 24. | இலங்கை மின்சார சபையின் விசாரணை தொடர்பாக வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனி | 24.10.2025 |
| 25. | இலங்கை துறைமுக அதிகாரசபை | 13.11.2025 |
| 26. | இலங்கை தேசிய சேமிப்பு வங்கி | 19.11.2025 |
| 27. | இலங்கை தேசிய சேமிப்பு வங்கி | 26.11.2025 |

இவற்றில், 2025.08.20 ஆந் திகதி விசாரிக்கப்பட்ட துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் கீழுள்ள இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகள் மற்றும் இந்த அதிகாரசபையின் தற்போதைய செயலாற்றுகை விசாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| நிறுவனம் | கணக்காய்வு அபிப்பிராயம் | |
|---|---|---|
| | 2022 | 2023 |
| இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

### கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகைகள்

01 முனைப்பழியற்ற அபிப்பிராயம் (Unqualified Opinion)

நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் நிதி நிலைமையை நியாயமாக முன்வைக்கின்றன

02 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (Qualified Opinion)அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது.

03 அபிப்பிராயம் மறுப்பு (Disclaimer of Opinion)

போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை இணங்காண முடியாத காரணத்தினால் கணக்குகள் குறித்து ஒரு கருத்தை வெளிப்படுத்த முடியவில்லை.

04 அபிப்பிராயம் மறுப்பு (Disclaimer of Opinion)

போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை இணங்காண முடியாத காரணத்தினால் கணக்குகள் குறித்து ஒரு கருத்தை வெளிப்படுத்த முடியவில்லை.

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
## *(துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு)*

**ஆராயப்பட்ட திகதி – 2025.08.20**

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

01. **2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை ஆராய்தல்**

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்குரிய (CAASL) வாய்ப்புகள் மற்றும் எதிர்ப்பார்க்கப்பட்ட முன்னேற்றங்களை அடையக் கூடியவாறு, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்த அதிகாரசபை சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டம் ஆகியவற்றை தற்போதைய நிலைமைகளுக்கு பொருந்தக்கூடியவாறு திருத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு (ICAO) விமானப் போக்குவரத்து துறைக்கு வசதிகளை வழங்குதல், ஒழுங்குபடுத்தல் மற்றும் புதிய வான்வெளி தொழில்சார் நிபுணர்களை உருவாக்குதல் தொடர்பாக 19 இணைப்புகளுடன் விதப்புரைகளை முன்வைத்துள்ளதோடு அவற்றை நடைமுறைப்படுத்தும் பணியையும் மேற்கொண்டு வருகின்றது. ICAO விதப்புரைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு CAASL மற்றும் தனியார்துறைக்கு இடையில் கூட்டாண்மை என்பது கட்டாயம் பேணப்பட வேண்டியதுடன். இதற்கு அமைவாக பயிற்சி நிலையங்கள், உள்நாட்டு சிவில் விமான சேவை நிறுவனங்கள் மற்றும் பராமரிப்பு சேவை வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் CAASL இணைத்தொடர்பை பேணி வருகின்றது.

புதிய உள்நாட்டு விமான நிலையங்கள் மற்றும் புதிய தேசிய விமான சேவை நிறுவனங்களை நிறுவுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. பங்குதாரர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வசதிகளை வழங்குவதற்கும் ICAO இன் 9 வது இணைப்பின் படி ஆலோசனைக் குழுவொன்றை நியமிப்பதற்கும் அதற்கேற்ப விடயங்களை ஆராய்ந்து சட்டம் திருத்தப்பட வேண்டும். இதற்கு அமைவாக, சட்டத்தின் ஏற்பாடுகளில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் இனம் காணப்பட்டு திருத்தச் சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2026 ஆம் ஆண்டில் சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பின் (ICAO) கணக்காய்விற்குட்படுத்தப்படவுள்ளமையால், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை இனம் கண்டு, அமைச்சரவை அங்கீகாரத்துடன், திருத்தச் சட்டமூலம் சட்ட வரைஞர் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தேவையான திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

<u>குழுவின் விதப்புரை</u>

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நடவடிக்கைகளை வளர்ச்சியடையச் செய்யும் நோக்குடன் மேற்கொள்வதற்காக 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை இனம் காணலும் அதற்கேற்ப எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் குழுவிற்கு அனுப்புதல்.**

## 02. <u>பணிப்பாளர் சபை கட்டமைப்பு</u>

- **பணிப்பாளர் சபையின் கட்டமைப்பானது சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பொருந்தாமை: 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க** இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் 3(1) பிரிவின் படி, அமைச்சரினால் நியமிக்கப்படும் **ஐந்து உறுப்பினர்கள்** உள்ளடங்களாக

**எட்டு பேர் அடங்கிய** பணிப்பாளர் சபை நியமிக்கப்பட வேண்டிய போதிலும், நியமிக்கப்பட வேண்டிய ஐந்து உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட வேண்டிய **சிவில் விமான சேவைகள் தொடர்பான அனுபவம் வாய்ந்த இரண்டு உறுப்பினர்கள்** நியமிக்கப்படவில்லையென்பதுடன் பிரதம நிறைவேற்று அலுவலரான பணிப்பாளர் நாயகம் பதவி பதில் கடமையாற்றும் பதவியாக காணப்படுகின்றமை.

- **தாபனத்தின் நிர்வாக வழிக்காட்டல் மீறப்பட்டமை:** அரசாங்கப் பொறுப்பு தொழில் முயற்சிகளுக்கான தாபன நிர்வாகம் பற்றிய வழிகாட்டலின் 2.4 பிரிவின் படி, பணிப்பாளர்கள் ஆண்டுவாரியாக அவர்களது கடமைகளுடன் தொடர்புடைய நிதி சார்ந்த அல்லது வேறேதேனும் தொடர்புகள் கிடையாதென பிரகடனப்படுத்த வேண்டியிருந்த போதிலும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களிடமிருந்து அப்பிரகடனம் பெறப்படவில்லை.

**<u>குழுவின் விதப்புரை</u>**

**அரச தொழில்முயற்சிகளுக்கு நிறுவன நிருவாக வழிகாட்டல்களின் 2.4 பந்திக்கு அமைய அதிகாரசபையின் பணிப்பாளர்களுக்கு அவர்களின் கடமைகளில் தாக்கம் செலுத்தும் நிதிசார் அல்லது வேறு தொடர்புகள் இல்லை என்பதற்கான வெளிப்படுத்தலை வருடாந்தம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.**

## 03. <u>நிறுவனத் திட்டம்</u>

2025.03.24 ஆம் திகதிய சனாதிபதி செயலாளரின் PS/SB/Circular/03/25 சுற்றறிக்கைக்கு அமைய, நாட்டின் தேசிய கொள்கைக்கு இசைவாக 05 வருடங்களுக்கான உபாயமுறையிலான திட்டத்தை தயார் செய்ய வேண்டுமாயினும், அதிகாரசபை **2025 முதல் 2027 வரையான 3 வருடங்களுக்கு** மாத்திரம் உபாயமுறையிலான திட்டத்தை தயார் செய்திருந்தது. மேலும், மேற்படி சனாதிபதி சுற்றறிக்கைக்கு அமைய 2025 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டம், வரவு செலவுத்திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2025 ஆண்டின் இறுதியளவில், 2026 ஆண்டு முதல் 2030 வரையான 5 வருடங்களுக்கு rolling over முறையில் கூட்டுத்திட்டத்தைத் தயார் செய்வது அதிகாரசபையின் எதிர்பார்ப்பாகும் என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

<u>**குழுவின் விதப்புரை**</u>

**அதிகாரசபையின் 2026 -2030** உபாயமுறையிலான திட்டத்தை தயார் செய்யும் போது **PS/SB/Circular/03/2025** ஆம் இலக்க மற்றும் 2025 மார்ச் 24 ஆம் திகதிய சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கைக்கு அமைய, வருடாந்த செயற்றிட்டத்தை **rolling over** முறையில் 5 வருடங்களுக்குத் தயார் செய்தல். அதற்கு இசைவாக வரவு செலவுத்திட்டம் மற்றும் பெறுகைத் திட்டத்தை தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல்.

## 04. <u>பணியாட்டொகுதியின் வெற்றிடங்கள்</u>

2025 யூன் 30 ஆம் திகதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதி ஒழுங்கமைப்பு பின்வருமாறாகும். ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 208 ஆகும் என்பதுடன், வெற்றிடங்களின் எண்ணிக்கை 43 ஆகக் காணப்பட்டது.

சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள்: வெற்றிடம் **14** (அங்கீகரிக்கப்பட்டது **52**, உண்மை **38**).

மூன்றாம் மட்டத்திலான பதவிகள்: வெற்றிடம் **16** (அங்கீகரிக்கப்பட்டது 57, உண்மை 41).

இரண்டாம் மட்டத்திலான பதவிகள்: வெற்றிடம் **12** (அங்கீகரிக்கப்பட்டது 60, உண்மை 48).

ஆரம்ப மட்டத்திலான பதவிகள்: வெற்றிடம் 01 (அங்கீகரிக்கப்பட்டது 39, உண்மை 38).

சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை பதவிகளுக்குத் தேவையான தகைமைகள் தயார் செய்யப்பட்டிருப்பது **சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பின்**

(ICAO) தரநியமங்களுக்கு இணங்கவாகும் என்பதுடன், அதற்கமைய மேற்படி பதவிகள் தொடர்பாக உயர் மட்டத்திலான தொழில்சார் மற்றும் கல்வித் தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. மேற்படி பதவி வெற்றிடங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்ட போதிலும், தகுந்த விண்ணப்பதாரிகள் இல்லாத நிலை எழுந்துள்ளது.

போதியளவு தகைமைகளைக் கொண்ட தொழில்வல்லுனர்கள் இல்லாமை காரணமாக 2026 ஆம் ஆண்டில் அதிகாரசபை எதிர்கொள்ளவுள்ள **ICAO கணக்காய்வின் போது** அதிகாரசபைக்கு வழங்கப்படும் புள்ளி மட்டம் குறைவடைய வாய்ப்புள்ளது என்றும், இது நாட்டுக்கு பாரிய பாதிப்பாக அமையலாம் என்பதும் அவதானிப்புச் செய்யப்பட்டது.

ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை (SOR) தயார் செய்யப்பட வேண்டியது **ICAO தகவுதிறன்களுக்கு** இசைவாகவாகும் என்றும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் தகவுதிறன்களுக்கு அமைய தயார் செய்யப்படுகின்ற SOR மூலம் அதிகாரசபையின் தேவைப்பாடு நிறைவேற்றப்படுவதில்லை என்றும், அதற்கமைய அதிகாரசபையினால் **ICAO தரநியமங்களுக்கு** இசைவாக திருத்திய ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையை, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் வெளிப்படுத்தப்பட்டது.

சர்வதேச சிவில் விமான அமைப்பின் (ICAO) தகவுதிறன்களுக்கு இசைவானவாறு சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைகளைத் (SOR) தயார் செய்வது பற்றி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி குறித்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைகளை (SOR) தயார் செய்து அவற்றை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஊடாக அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறித்த செயன்முறையின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை ஒரு மாத காலப்பகுதிக்குள் குழுவிடம் கையளிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைக்கு அமைய அது பற்றி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரைாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>குழுவின் விதப்புரை</u>

**I. 2026 ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள சர்வதேச சிவில் விமான அமைப்பின் (ICAO) கணக்காய்வை வெற்றிகரமாக்கிக் கொள்ள**

**அவசியமான சிரேஷ்ட பதவிகளின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்பத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

**II. நீண்ட காலமாக அதிகாரசபையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது வெளிநாடு சென்றுள்ள, எனினும் நாடு திரும்பிய பின்னர் சேவையாற்ற விருப்பத்துடன் உள்ள ஆட்கள் உட்பட தனியார் துறை மற்றும் விமானப் படையில் சேவையாற்றும் சிவில் விமானத்துறை சார்ந்த தொழில்வல்லுனர்களின் கவனத்தை ஈர்க்கும் வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய நடவடிக்கை எடுத்தல்.**

## 05. <u>அதிகாரசபை சேகரிக்கின்ற வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணத்தை (OSS) திரட்டு நிதியத்தில் செலவு வைக்காமை</u>

**2008 மே 22 ஆம் திகதிய 1550/7** ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானப் பத்திரிகையின் 7 மற்றும் 8 ஆம் பிரிவுகளுக்கு அமைய, அதிகாரசபையினால் சேகரிக்கப்படுகின்ற வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணத்தை (OSS) திரட்டு நிதியத்தில் செலவு வைத்தல் வேண்டுமாயினும் 2008 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபை மேற்படி வருமானத்தை, திரட்டிய நிதியத்தில் செலவு வைக்காது, அதிகாரசபையின் வருமானமாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக குழு கவனம் செலுத்தியது.

**2018 முதல் 2023 நவம்பர் வரையான** காலப்பகுதிக்குள் சேகரிக்கப்பட்டிருந்த ரூ.மி. **20,630** ஆன தொகை திறைசேரிக்கு அனுப்பப்படவில்லை என்பதுடன் மேற்படி OSS வருமானம், அதிகாரசபையின் ஒட்டுமொத்த வருமானத்தில் **80%** எனும் அளவைக் கொண்ட முக்கிய வருமான மூலமாக அதிகாரசபை கருதியுள்ளது.

எனினும் அதிகாரசபைக்கு நிதிசார் சிக்கல்கள் இருக்கவில்லை என்பதனால், வர்த்தமானி அறிவித்தலின் கட்டளைகளை மீறி இத்தொகை தடுத்துவைக்கப்பட்டுள்ளமை கடும் தவறாகும்.

எவ்வாறாயினும், **2023 நவம்பர் 28 ஆம் திகதிய 23/1937/628/094** ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய, கூட்டுத்தொகையான OSS வருமானத்தில் **மாதாந்தம் ரூபா மில்லியன் 90** ஆன தொகையை அதிகாரசபையின் செயற்பாட்டு செலவினங்களுக்கு ஒதுக்கிக் கொண்டு, எஞ்சிய தொகையை திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட வருமானத்தில் ஒரு பகுதியை பல்வேறு மூலதன செலவினங்களுக்கு பயன்படுத்தியிருந்ததுடன், **ரூபா பில்லியன் 4** ஆன தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பின் (ICAO) தகவுதிறன்களுக்கு அமைய, சிவில் விமான சேவைகள் அதிகாரசபையை (CAA) நிதிசார் சுயாதீனத்தன்மையுடன் பேணிவருவது அத்தியாவசியமானதாகும் என்றும், அதற்கு வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டண (OSS) வருமானம் மிக முக்கிய செயற்பணியை ஆற்றிவருகின்றது என்றும் அதிகாரசபை தெரிவித்தது.

<u>குழுவின் விதப்புரை</u>

I. **சர்வதேச சிவில் விமான அமைப்பின் (ICAO) தகவுதிறன்களுக்கு அமைய அதிகாரசபையை சுய நிதியீட்டல் நிறுவனமாக பேணிவருவதற்குத் தேவையான நிதியை நிறுவனத்தில் தடுத்துவைத்துக் கொண்டு எஞ்சிய வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டண (OSS) வருமானத்தை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய குறிப்பான நடவடிக்கைகள் பற்றி பரந்தளவில் ஆராய்ந்துபார்த்து அது பற்றிய சிக்கல்களை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.**

II. **அதிகாரசபையின் சுயநிதியீட்டலுக்குத் தேவையான நிதியின் அளவை நிறுவனத்தில் தடுத்துவைப்பதற்காக 2008 மே 22 ஆம் திகதிய 1550/7 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானப் பத்திரிகையின் 07 மற்றும் 08 பிரிவுகள் தொடர்பான கட்டளைகளை மாற்றம் செய்துகொள்வது தொடர்பாக அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளல்.**

III. **நிறுவனத்திற்கு உரித்தான மொத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றைத் தயார் செய்தல்.**

IV. **2023 நவம்பர் 28 ஆம் திகதிய 23/1937/628/094 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தை மீண்டும் ஆராய்ந்துபார்த்து அதிகாரசபையின் சுய நிதியீட்டலுக்குத் தேவையான நிதியின் அளவு பற்றித் தீர்மானித்தல்.**

## 06. <u>அதிகாரசபைக்கு விமானக் கம்பனிகளிடமிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டியுள்ள வரி நிலுவை காணப்படல்</u>

**2003 இன் 25 ஆம் 3 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 3 மற்றும் 4** பிரிவுகளுக்கு அமைய, இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் விமானப் பயணிகளுக்கு இலங்கைக்கு வெளியே வெளியிடப்படுகின்ற ஒவ்வொரு விமானச்சீட்டு மூலமும் அல்லது இலங்கைக்கு வெளியே புறப்பட்டுச் செல்லும் ஆட்களுக்கு இலங்கையில் வெளியிடும் ஒவ்வொரு விமானச்சீட்டு மூலமும் 60 அமெரிக்க டொலருக்கு சமமான விமானமேறல் வரியை அறவிட்டு மேற்படி விமானக் கம்பனி அதிகாரசபைக்கு செலுத்தல் வேண்டும். **2025 யூன் 30 ஆம் திகதியளவில்** மேற்படி விமானமேறல் வரியில் ரூ.மி. **30,844.4 மற்றும் அமெ.டொ. 1,541,962** என்ற வகையில் அதிகாரசபைக்கு விமானக் கம்பனிகளிடமிருந்து அறவிட வேண்டிய தொகைகளில் நிலுவை காணப்பட்டது.

அதற்கமைய, கீழே குறிப்பிடப்பட்டுள்ள விமானக் கம்பனிகளிடம் மாத்திரம் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளின் விபரம் பின்வருமாறாகும் (2025.06.30 திகதிக்கு):

| **விமானக் கம்பனியின் பெயர்** | **வரி – ரூ.மி.** | **வட்டி- ரூ.மி.** | **மொத்தத் தொகை – ரூ.மி.** |
|---|---|---|---|
| ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி | 22,450.9 | 4,669 | 27,120.3 |
| பிட்ஸ் எயார் கம்பனி | 2,074.7 | 445.6 | 2,520.3 |

மேலுள்ளவாறு வரி செலுத்துவதை புறக்கணிக்கும் விமானக் கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான **ஏற்பாடுகள் 2003 இன் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் இல்லை** என்பதனால் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு சட்ட மாஅதிபர் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சுடன் கலந்துரைாடல் மேற்கொள்ளப்பட்டு வருவது தெரியவந்தது.

2022 ஆண்டு முதல் கொவிட் தொற்றுக் காரணமாக ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் வரி வருமானத்தை தமது நிதி நடவடிக்கைகளுக்கு ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி பயன்படுத்தியுள்ளது என்றும், அவ்வாறு வரிப் பணத்தை தடுத்துவைத்துக் கொள்ள 2003 இன் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு அமைய கம்பனிக்கு எந்தவொரு ஏற்பாடும் இல்லை என்று அதிகாரசபைக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், 2024 ஆண்டு முதல் சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கு விமானமேறல் வரியைச் செலுத்துவதை ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி மீள ஆரம்பித்துள்ளது என்றும், இச்சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகை 2022-2024 காலப்பகுதிக்குரிய நிலுவை வரித்தொகை மற்றும் அதற்கான வட்டியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

<u>குழுவின் விதப்புரை</u>

**புறப்பாட்டுக் கட்டண வரி, ஒழுங்குறுத்தல் சேவைகளிலிருந்தான வருமானம், வட்டி வருமானம் மற்றும் வேறு நடவடிக்கை அல்லாத வருமானங்கள் உட்பட சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கு கிடைக்கின்ற ஏனைய வருமானங்கள் பற்றி பரந்தளவில் ஆராய்ந்து அது சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.**

## 07. **<u>அதிகாரசபைக்கு உரித்தானதாகக் காணப்பட்ட தலங்கம, அகுரேகொட காணிக்குப் பதிலாக சீதாஎலிய கந்தபொல வனத்திலிருந்து வழங்கப்பட்ட காணியின் உரித்தை சாட்டுதல் செய்துகொள்ள அதிகாரசபை தவறியுள்ளமை.</u>**

அப்போதைய சிவில் விமான சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தானதாகக் காணப்பட்ட, உயர் அதிர்வெண் பரிமாற்ற நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்த **தலங்கம, அகுரேகொட 52 ஏக்கர் அளவான காணி**, **2006 யூன் 13** ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய பாதுகாப்புத் தலைமையகத்தை நிர்மாணிக்க சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டுள்ளது. மேற்படி காணிக்குப் பதிலாக உகந்த காணிக்கும் மற்றும் பரிமாற்ற நிலையத்தைத் தாபிப்பதற்காகவும் ரூ.மி. 161 ஆன தொகையை திறைசேரியிலிருந்து விடுவிக்க அங்கீகாரம் கிடைத்துள்ளது.

எவ்வாறாயினும், **2002 இன் 34 ஆம் இலக்க விமான சேவைகள் அதிகாரசபை சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கு அமைய** தலங்கம காணியை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்வதற்கு அப்போதைய அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை என்பதனால், மேற்படி காணியின் உரித்து அதிகாரசபையிடம் இல்லை என்றும், காணியை பெற்றுக் கொடுத்தல் மற்றும் பரிமாற்ற நிலையத்தை தாபிப்பதற்காக ரூ.மி. 161 வழங்கப்பட்டிருப்பது வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனிக்காகும் (AASL) என்றும் தெரியவந்துள்ளது.

தலங்கம காணிக்குப் பதிலாக வழங்கப்பட்ட சீதாஎலிய கந்தபொல வனத்தின் **0.9431 ஹெக்டயர் அளவான காணியும்**, **2025 பெப்ருவரி 28 ஆம் திகதி வரை** அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை என்றும், சீதாஎலிய காணியின் ஆதனவுரிமை (possession) வர்த்தமானி அறிவித்தல் மூலம் AASL கம்பனிக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது என்பதும், காணியின் உரித்தை அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்துகொள்வதற்கு தற்போது

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதும், அவதானிப்புச் செய்யப்பட்டது.

சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அறியாத நிலையில் அரசியல் தலைமையினால் காணி சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டதன் மூலம் அதிகாரசபையின் ஒழுங்குறுத்தல் செயற்பணியில் குறைபாடு அவதானிப்புச் செய்யப்படுகின்றது என்று குழு வலியுறுத்தியது.

<u>குழுவின் விதப்புரை</u>

**சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கு உரித்தான ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக முழுமையான கணக்காய்வை மேற்கொண்டு மேற்படி தரவுகளை இற்றைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.**

## 08. <u>வீரவில சுற்றுலா விடுதியை புனரமைப்புச் செய்தல்.</u>

**2022 மே 18** ஆம் திகதி வீரவில சுற்றுலா விடுதியின் ஒரு பகுதி தீயினால் சேதமடைந்திருந்ததுடன், முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புச் சேவைகளை வழங்கும் கம்பனியைச் சேர்ந்த ஊழியர் ஒருவரின் கவனயீனம் இதற்குக் காரணமாகும் என்றும், அது தொடர்பாக அதிகாரசபை நிதிப் பிரமாணம் **101, 103 மற்றும் 104** இற்கமைய உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை என்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

குறித்த தீ விபத்தின் பின்னர் ரூபா **252,000** ஆன செயலாற்றுகை பிணையிலிருந்து ரூபா **226,000** ஆன தொகையை அறவிட்டுக் கொண்டு இழப்பை ஈடுசெய்து புதுப்பித்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்பதும், முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புச் சேவைகள் நிறுவனத்திற்கு மாதாந்தம் ரூபா **210,000/-** ஆன தொகை செலுத்தப்பட்டுள்ள போதிலும், விடுதியிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா **200,000/- – 400,000/-** ஆகும் என்பதும், விடுதியின் பராமரிப்புப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்பதும் தெரியவந்ததன் காரணமாக மேற்படி நிறுவனம் தற்போது

கரும்பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது என்பதும் அவதானிப்புச் செய்யப்பட்டது.

நீர் வழங்கல் திட்டத்தை புனரமைப்புச் செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூ.மி. 4.5 ஆயினும், விடுதியின் பெறுகைப் பணிகளுக்கு அதிகாரசபை மதிப்பீடு செய்த **ரூ.மி. 16 ஐயும்** விஞ்சியதாக மொத்தச் செலவினம் **ரூ.மி. 24** செலவிடப்பட்டுள்ளது.

பெறுகைத் திட்டத்தில் புனரமைப்புப் பணிகளுக்கு **ரூ.மி. 4.5** ஒதுக்கப்பட்டிருந்தது விடுதியின் மதிலுக்கு மாத்திரமாகும் என்றும், முழு விடுதியையும் புனரமைப்புச் செய்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்ததன் காரணமாக ஆரம்ப மதிப்பீடு **ரூ.மி. 25 ஆக** மாறியது என்றும் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், 2016 ஆம் ஆண்டு முதல் இவ்விரு வருடங்களாக சேவை திருப்தியளிப்பின் அடுத்த ஆண்டில் புதுப்பிக்கும் வகையில் உடன்படிக்கைகள் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புச் சேவை நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும், 2019 ஆம் ஆண்டு முதல் ஒன்றரை வருட காலம் மாத்திரம், அப்போது நிலவிய நிலைமையின் அடிப்படையில், அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனத்திற்கு உடன்படிக்கை இன்றி அதே விலைகளின் கீழ் சுற்றுலா விடுதியில் சேவைகளை வழங்குவதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது என்றும், அதற்காக ரூ.மி. 6 செலுத்தப்பட்டுள்ளது என்றும், சுற்றுலா விடுதியின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலும் ஆரம்ப சேவை வழங்குபவரினால் பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டுள்ளதனால், மேற்படி காலப்பகுதிக்கு ஒரு மில்லியன் ரூபா ஆன கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

<u>குழுவின் விதப்புரை</u>

**I. சுற்றுலா விடுதியை புனரமைப்புச் செய்யும் ஒட்டுமொத்த செயன்முறை தொடர்பில் முழுமையான விசாரணையை**

**மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தல். மேலும் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புச் சேவைகளை ஆற்றியுள்ள நிறுவனம் தொடர்பான தகவல்கள், குறித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ள முறை, அந்நிறுவனத்திற்கு நிதி செலுத்திய முறை மற்றும் அவ்வாறு செலுத்திய தொகைக்கு இசைவாக சேவைகள் இடம்பெற்றுள்ளதா ஆகிய விடயங்களை குறித்த அறிக்கையில் உட்புகுத்தல்.**

II. **கணக்காய்வு தொடர்பான சகல தகவல்களையும் கணக்காய்வை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குப் பெற்றுக் கொடுக்க எல்லாச் சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை மேற்கொள்ளல்.**

## 09. அதிகாரசபையினால் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பித்தல்.

அதிகாரசபையினால் 2021 இல் 09 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்புச் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக ரூ.மி. 10.67 ஆன தொகை செலவிடப்பட்டுள்ள போதிலும், புனரமைப்புக்கு முன்னர் காணப்பட்ட பிரதான குறைபாடுகள் புனரமைப்பின் பின்னரும் அவ்வாறே காணப்பட்டன.

முதற் தடவையாக பத்திரிகை அறிவித்தல் மூலம் விலைமனுக் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் விலைமனுக்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும், மீண்டும் விலைமனுக் கோரப்பட்ட போது ரூ.மி. 36 ஆன தொகைக்கு விலைமனுக்கள் கிடைத்துள்ள போதும், இதனைத் திணைக்களத்தின் பெறுகைக் குழு நிராகரித்துள்ளது என்றும், இவ்விரு சந்தர்ப்பங்களும் தோல்விகரமான விலைமனுக் கோரலாகும் என்றும், மொத்த செலவினமான ரூ.மி. 10.67 ஆன தொகையில் புனரமைப்புக்காக செலவாகியிருப்பது ரூ.மி. 7 ஆன தொகை மாத்திரமாகும் என்றும், எஞ்சிய தொகை தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டுள்ளது என்பதும் தெரியவந்துள்ளது.

செலுத்தப்பட்ட தொகைக்கு இசைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்பு நடவடிக்கைகள் போதியதாக இல்லை என்றும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

<u>குழுவின் விதப்புரை</u>

**ஒரு மாதத்திற்குள் உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்புச் செய்யும் ஒட்டுமொத்த செயன்முறை தொடர்பாக பூரண விசாரணையொன்றை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தல். புனரமைப்புப் பணிகளை மேற்கொண்ட நிறுவனத்திற்கு நிதி செலுத்தியுள்ள முறை தொடர்பான விடயங்கள், மேற்படி செலுத்திய தொகைக்கு இசைவாக புனரமைப்புச் செயன்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளதா ஆகிய விடயங்களை மேற்படி அறிக்கையில் உள்ளடக்குதல்.**

## 10. <u>முறையான குத்தகை உடன்படிக்கை இன்றி வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) கம்பனிக்கு காணிகளை வழங்கியமை.</u>

2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் அதிகாரசபை சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விமான வசதிகள் மற்றும் காணிகள், முறையான குத்தகை உடன்படிக்கையோ அல்லது வாடகை உடன்படிக்கையோ இன்றி வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) கம்பனிக்கு (AASL) வழங்கப்பட்டிருந்தன.

2002 இன் 34 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, சட்டத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ள விமானங்கள், விமான வசதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட காணிகளின் ஆதனவுரிமையை சிவில் விமான சேவைகள் இயக்குபவரான AASL இற்குப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இவ்வாறு சாட்டுதல் செய்வதை முறையாக மேற்கொண்டிருக்கவில்லை என்பதை குழு அவதானிப்புச் செய்தது.

இந்த வசதிகள் மற்றும் காணிகளின் ஆதனவுரிமை பற்றி AASL கம்பனியிடம் கட்டணம் அறவிடுவது தொடர்பாக சட்ட மாஅதிபர் திணைக்களத்துடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன என்றும், கட்டணங்களை விதிப்பதற்கான பிரேரணை இலக்கம் 2422/38 மற்றும் இலக்கம் 2422/39 இன் கீழ் 2025.02.06 திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதென்றும், மேற்படி பிரேரணை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அங்கீகாரம் கிடைத்த பின்னர் கட்டணம் கிடைக்கும் உடன்படிக்கைகளை செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் முகாமைத்துவம் தெரிவித்தது.

## 11. யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் காணிகளை இனங்காண நடவடிக்கை மேற்கொள்ளல்.

**2019 அக்டோபர் 17 ஆம் திகதி** யாழ்ப்பாணம் விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அதற்கு **2019 செப்தெம்பர் 26 ஆம் திகதிய 2142/74 ஆம் இலக்க** வர்த்தமானப் பத்திரிகை மற்றும் அமைச்சரவைத் தீர்மான இலக்கம் **CP/19/2008/105/009-1** மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையினால் யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் **349 ஏக்கர்** அளவான காணிகளின் எல்லைகளை இனங்காணும் செயற்பாடு நிறைவு செய்யப்பட்டு, வர்த்தமானிப் பத்திரிகை மூலம் பிரகடனம் செய்ய இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

குறித்த காணி எல்லைகளை வர்த்தமானியில் வெளியிடத் தேவையான கட்டளைகள் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தயார் செய்யப்பட்டு சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பித்த பின்னர் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புக்களுடன் கிடைத்துள்ள ஆவணம் அமைச்சரின் அங்கீகாரத்துக்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 12. <u>கேப் ரவுன் சமவாயத்தை தத்துவமுள்ளதாக்கல்.</u>

கேப் ரவுன் சமவாயத்தை (Cape Town Convention) தத்துவமுள்ளதாக்கத் தேவையான சமவாயச் சட்டவரைவு, சட்டவரைஞரினால் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2025 மே 15 ஆம் திகதி விலக்களிப்புக்காக சட்ட மாஅதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
சட்டவரைஞரினால் தயார் செய்யப்பட்டுள்ள திருத்திய சட்டவரைவுக்கு சட்ட மாஅதிபரின் விலக்களிப்பு கிடைக்கவுள்ளதாக அதன் தற்போதைய நிலைமை பற்றி வினவிய போது அறியக்கிடைத்தது.